**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டம் - மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 20 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு மாணவியருக்கான கழிவறை வசதி ரூ.11.71 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண்.40 நாள்: 25.5.2000
படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதம் எண்.பி2 /305 / 2000 நாள் 17.4.2000

ஆணை:

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், ஏற்கனவே 57 பள்ளிகளுக்கு இதுவரை மாணவியருக்கான கழிவறை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 2000-2001ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேலும் 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாணவியருக்கான கழிவறை வசதி மொத்தம் ரூ.11.71 இலட்சம் செலவில் செய்து கொடுப்பதற்கான செயற்குறிப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு ஏற்றுக் கொண்டு, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ள, இவ்வரசாணையின் இணைப்பில் விவரித்துள்ள 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், மாணவியருக்கான கழிவறை ஒன்று ரூ.58,550/- மதிப்பில், மொத்தம் 20 கழிவறைகள் ரூ.11.71 இலட்சம் மதிப்பில் (ரூபாய் பதினொரு இலட்சத்து எழுபத்தொன்றாயிரம் மட்டும்) 2000-2001ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு அரசு உத்திரவிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையை கீழ்வரும் கணக்குத் தலைப்பில் செலவிடலாம், “4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - மிமி மாநிலத் திட்டம் யிஹி கட்டிடங்கள் - 16 பெரும்பணிகள் (த.தொ.கு எண். 4225 03 277 யிஹி 1601)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 34095 /சந/2000 நாள் 3.5.2000 இன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலாளர்

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை 600 005.
மாவட்ட ஆட்சியர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6
(பெயருடன் கூடிய உறையில்)
மாவட்டக் கருவூல அதிகாரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
நகல்: பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

2000-2001 பகுதி-2 திட்டத்தின் கீழ் கழிவறை வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய பள்ளிகளின் விவரம்:-

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி, கருக்கட்டான்பட்டி | மதுரை |
| 2. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, முத்துப்பட்டி. | மதுரை |
| 3. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, நாட்டார்மங்கலம். | மதுரை |
| 4. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, கே.பெருமாள்பட்டி. | மதுரை |
| 5. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, கருமாத்தூர். | மதுரை |
| 6. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, கண்ணனூர். | மதுரை |
| 7. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, மேலக்கடலூர். | தேனி |
| 8. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, ஜெயமங்கலம். | தேனி |
| 9. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, உ.அம்மாபட்டி | தேனி |
| 10. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, டி.காமக்காபட்டி. | தேனி |
| 11. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, தேவதானபட்டி. | தேனி |
| 12. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, வாழையாத்துப்பட்டி | தேனி |
| 13. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, சித்தர்கள் நத்தம் | திண்டுக்கல் |
| 14. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி,முசுவனூத்து | திண்டுக்கல் |
| 15. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, தெப்பத்துப்பட்டி | திண்டுக்கல் |
| 16. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, இராமநாஜபுரம் | திண்டுக்கல் |
| 17. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, பொன்னிமாந்துரை | திண்டுக்கல் |
| 18. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, குட்டியபட்டி | திண்டுக்கல் |
| 19. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, கோட்டுர் ஆவரம்பட்டி | திண்டுக்கல் |
| 20. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி,சொக்கலிங்கபுரம் | திண்டுக்கல் |

/உண்மை நகல்/